**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 80** **நாள்: 11.04.2026**

**சென்னை மாவட்டத்தில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து ரிப்பன் கட்டடம், எழிலகக் கட்டடம், அண்ணாசாலை மற்றும் கோயம்பேடு மேம்பாலம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்களுடன் இராட்சத பலூன்கள் பறக்கவிடப்பட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா" எனும் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி பல்வேறு வகைகளில் நடத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடமான ரிப்பன் கட்டடம், எழிலகக் கட்டடம், அண்ணாசாலை மற்றும் கோயம்பேடு மேம்பாலம் அருகில் உள்ளிட்ட முக்கியமான 4 இடங்களில் "தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா" 100% வாக்களிப்போம், வாருங்கள் என்கிற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்களுடன் கூடிய இராட்சத பலூன்கள் பறக்கவிடப்பட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

**"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா"**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**